ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவைப்
# பற்றி
# சுகர் நாடி கூறும்
# சாயி சரித்திராமிர்தக்
# கிரந்தம்

பகவானின் செய்மதிப் பட அற்புதம்
அவரின்
வானளாவிய தேஜஸ்

ௐ

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி சரித்திராமிர்தக் கிரந்தம் (பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவைப்பற்றி சுகர் நாடி கூறுவது)

பங்களூரில் பிரபல சோதிட ஆச்சாரியராக விளங்கும் ஸ்ரீ கஞ்சூர் நாராயண சாஸ்திரிகள் அண்மையில் ரிஷி சுகரால் எழுதப்பெற்ற சுக நாடிக்கிரந்தத்தில் ஒரு கட்டு ஏடுகளைக் கண்டார். சமஸ்கிருதமொழியில் சாயி சரித்திரமிர்தக் கிரந்தம் என்ற பெயருடன் நூற்றுக்கு மேற்பட்ட ஏட்டுச் சுவடிகள் கொண்டகட்டு 5000 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டதாக எண்ணப்படுகிறது. இதில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் கோத்திரத்தைப்பற்றியும் அவரைப்பற்றிய அநேக உண்மைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில், இந்த உடலில் அவர் செய்து முடிக்க இருக்கும் மகா அற்புதங்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அநேக விபரங்களைக் கூறும் இந்த சுகர் நாடி ஏடுகளில் அவர் பிறந்தது அக்ஷய வருஷம் கார்த்திகை மாதம் செவ்வாய்க்கிழமை கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசித் திதி, திருவாதிரை நட்சத்திரம் 4-ம் பாதம் விருச்சிக லக்கினம், என்றும், அவர் அணிமா முதலிய அட்டமாசித்திகளும் கைவந்தவர், தன் இஷ்டத்தினல் காரியங்களை முடிக்கும் 'சங்கல்பசித்தர்'. பெருஞ் சக்திபடைத்தவர். ஆனால் உலகப்புகழிலோ பணத்திலோ பற்றில்லாதவர், விரும்பிய நேரம் இறக்கக்கூடிய 'இச்சா மரணப் பிராப்தி' பெற்றவர் என்று எல்லா ரிஷிகளும் இவரைப்பற்றி கூறுகிறார்கள். என்றும் 'நிர்விகல்ப சமாதிநிலையிலிருப்பவர், தர்ம பரிபாலனத்திற்காகவே வாழ்பவர். அவரது விஜயம் 'பிரஜோபகாரம்' (மக்களுக்கு உதவிசெய்வது). தர்ம

பிரசாரத்திற்காக (தர்மத்தைவளர்க்கவே) பிறந்தவர். அவர் பிறந்த பூமி புண்ணிய பூமியாக மாறும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பல உருவங்களிலும் போய் அவர் மக்களுக்குத் தரிசனம் கொடுப்பார். சங்கடங்கள், அபாயங்கள் தடைகளை நீக்குவார்: பஞ்சக்கரவாகனங்கள் உள்ள இடத்திற்கருகில் ஆச்சிரமம் அமைப்பார், ஆத்மபலத்தைத்தரும் கல்வி நிலையங்களை அவர் ஸ்தாபிப்பார். அடியார்களுக்குத் தன் எல்லாம் அறியும் தகைமையை பலவிதங்களில் காட்டுவார். அவரைச் சரண் அடைந்தவர்கள், தங்கள் பாபம் நீங்கப்பெற்று, புண்ணியமும் சாந்தியும் அடைவர்.

அவருடைய புகழ் எங்கும் பரவும், அநேக மக்கள் அவரிடம் வருவார்கள். ஆனால் சென் மாந்திர பாபமுள்ளவர்களுமிருப்பார்களாதலால் எல்லோருக்கும் அருள் கிட்டாது. இந்த மகாபுருஷர் பிரமச்சாரியாக வாழ்ந்து பிறருக்கு சேவை செய்வார். ஆணையும் பெண்ணையும் சமமாகக் காண்பவர் பெண்களின் மத்தியில் தாயைப்போல உலாவுவார். அவர் ஒரு பிரேமை ஸ்வரூபனும், ஆனந்த ஸ்வரூபனும், ஞான ஸ்வரூபனுமாயிருப்பார். ஆனல் ஆத்மஞானம் அடைந்தவர்களே அவருடைய ஆனந்த ஸ்வரூபத்தைத அனுபவிக்க முடியுமென்று சுகர் நாடி கூறுகிறது.

அவரை அனுபவிக்க முடியுமே ஒளிய விபரிக்க முடியாது (ஊமையும் செவிடுமான ஒருவர் உண்ண முடியுமே தவிரப் பேசமுடியாதுபோல்). பூரண நிர்விகற்ப நிலையே அவருடைய நிலையாகும். உலகத்தை ஒரு புல்லிதளாக காண்பவர். உலகத்தின் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தார். சரியானதையே செய்பவர்.

சிர்டி சாயிபாபாவின் பிரதிநிதியாகவும், அவரை மக்கள் வேண்டுதல் செய்ததின் நிமித்தமுமாகவே இவர் உடல் எடுத்திருக்கிறார். சிர்டிசாயி அடியார்களுக்கு இவர் சமாதி தரிசனம் கொடுப்பார். அங்ஙனமே சத்யசாயி அடி

யார்களுக்கும் தான் மறைந்தபின் வைற் பீல்டில் (White-Field) சமாதி தரிசனம் கொடுப்பார். அந்த இடம் புண்ணிய பூமியாகப் பூஜிக்கப்படும்.

அவருடைய வாழ்க்கை லோக கல்யாணத்திற்காக (மனித சமூகத்தின் நலனுக்காகவே) இருக்கும். பகவத் கீதையில் ''யதா யதா ஹிதர்மஸ்ய க்லானிர் பவதி பாரத அப்யுஸ்தானமதர்மத்ஸ்ய தட்ஆத்மானம் ஸ்ருஜாம்யஹம்' என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறினது போலவே இருக்கும்.

இந்த நாடி சாஸ்திரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; அதர்மம் நான்கின் மூன்று பங்களவிற்கு வளர்ந்து விட்டது. மிகுதிக் கால் பங்கு வளர்ந்து முழுவதும் அதர்மமாகும் பொழுதே ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் முழுச்சக்தியும் செயல்படத்தொடங்கும். உலகத்திற்கும் தெரியவரும். அதாவது தீய தன்மை முற்றாய் உலகத்தை மூடிக்கொள்ளும்போதே மக்கள் அவருடைய தெய்வீகத்தன்மையை முழுமையாய் அனுபவிக்கமுடியும்.

தற்போது உள்ள நிலையில் ஸ்ரீ சத்யசாயிபாபா தனது உண்மையான தத்துவத்தின் பத்திலொரு பகுதியையே வெளிப்படுத்தியிருக்கிறார். இன்னும் சில காலத்தில் அவர் உலகத்தை ரக்ஷிக்கும் முயற்சி பத்து மடங்காகும். முக்கியமாய் பிரளய காலத்தில் இயற்கையின் சீற்றத்தை அவரால்தான் அடக்கமுடியும் என்பதை அவர் காட்டுவார். பங்களூரில் 'பிருந்தாவனம்' என்னும் இடத்தில் ஒரு கற்பக விருட்சத்தை அவர் நாட்டுவார். அந்த இடம் ஒரு ஸித்திக் க்ஷேத்திரமாக மாறும்.

சுகர் நாடி மேலும் கூறுவது; ஸ்ரீசத்யசாயி பாபாவைத் தரிசித்தவர் எவருக்கும் மங்களம் உண்டாகும். சாயிநாதருடைய பிறப்பு லோக உபகாரத்திற்காக ஆதலால், அவருடைய செயல் எல்லாம் உலக நன்மைக்கேயாகும். அவருக்குத் தன்னுடைய சக்தியைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருந்தாலும் அதை வேண்டியபொழுதே சரியான வேளையிலேயே பாவிப்பார்.

அவருடைய கடாட்சம் மக்களுடைய பிரச்சனைகளை வெல்லவும் கஷ்டங்களை நீக்கவும் முன்னேற்றத்தில் கொண்டு செலுத்தவும் உதவும். இன்னும் சிறியகாலத்தில் அவருடைய மகிமை மேலும் பெருகி, உலகமெல்லாம் சத்யசாயி வழிபாடு நடக்கும். ஒரு இடத்தில் உறைகிற வரானாலும் ஒரேநேரத்தில் அநேக இடங்களில் அவர் தரிசனம் கொடுப்பார். அநேக தெய்வீகச் செயல்களையும் சிருஷ்டிகளையும் அவர் ஆக்குவார்.

உரிய நேரத்தில் அவர் ஒரு தர்மத்துவஜத்தை (தர்மக்கொடி ஸ்தம்பத்தை) நாட்டுவார். அதன்பின்பு தர்மத்தின் வளர்ச்சியைக் கண்கூடாகக் காணலாம். அவர் செய்வது ஏதும் எங்களுக்குச் சாதாரணமானதாகத் தோன்றினாலும், அவருடைய செயல்களின் தாக்கங்கள் பிரமாண்டமானவையாயும் தூரநோக்குடையனவாயும் இருக்கும் அவர் இயற்கையாகவே பொறுமையும் கருணையும் படைத்தவராதலால், எல்லோரையும் சமமாகவே கவனிப்பார். எவரிடமாகிலும் கோவிப்பதில்லை, மனதை நோகவைப்பதுமில்லை. அதிகமாய் வேடிக்கையாய்ப் பேசுவார். ஆனால் அவை எல்லாம் சத்தியமான வசனங்களே. அவர் எப்பொழுதாவது தன்னைப்பற்றி அல்லது தனது செயல்களைப் பற்றிப் பிரகடனப்படுத்த நேரிட்டால் (எப்பொழுதும் செய்வதில்லை. சிலநேரங்களில் மாத்திரம் செய்வார்.) அவை தர்மத்தின் வளர்ச்சிக்காகவும் நல்வாழ்க்கைக்கு வழிவகுப்பதற்கும் நல்லெண்ணத்தைப் பரப்புவதற்குமாகவே இருக்கும் இதை மக்களின் அறிவைப் பெருக்குவதற்கான தர்ம உபதேசப் பரப்புதல் என்று நாடி குறிப்பிடுகிறது. கடவுள் காலத்திற்குக் காலம் தர்ம உத்தாரணத்திற்காக அவதாரமெடுக்கிறார். ஸ்ரீ சத்திய சாயிபாபா தர்மம் தன்னை இரக்ஷிப்பவரை ரட்சிக்கிறது என்ற உண்மையைத் தக்க காலத்தில் நிருபிப்பார்.

ஸ்ரீ சத்ய சாயிபாபா வெறும் உலக அறிவுடைய வராயிராது, ஞானவித்யா என்னும் ஞான அறிவு உடையவராயிருப்பார். சிறுபிராயத்தில் உறவுகொண்டா

என்னும் இடத்தில் படித்தார். அந்த ஊரில் முன்னொரு காலத்தில் லிங்க வழிபாடு செய்பவர்களுடைய ஆச்சிரமம் ஒன்று இருந்தது. சிர்டி சாயிபாபாவின் அடியார்களுக்கு அவருடைய காலத்தில் பூரணமான அருள் கொடுக்காத குறைக்காகப் பிறந்திருக்கிறார். பிறப்பால் தொடர்பிருந் தாலும், பிறமக்களையும் தன் குடும்பத்தவரையும் ஒரே நோக்காகத்தான் பார்க்கிறார்,

சாயிநாதர் மக்களுக்கு உலகம் ஒரு மாயாஜாலம் என்றே போதிப்பார். அவருடைய தெய்வசக்திகள் உலகத் திற்குத் தெரியவரும். இந்தியாவில் அவர் வசித்தாலும் உலகத்தின் இதர பாகங்களிலுள்ள மக்களுக்குத் தரிசன மும் காட்சியும் கொடுக்கிறார். அநேகர் அவருடைய உரு வப்படத்தை வைத்து வழிபடுகிறார்கள். அவர் தங்க ளோடு என்னேரமும் இருக்கிறார் என்ற நம்பிக்கையில், மக்கள் தங்கள் வீடுகளில் ஒரு அறை அவருக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உண்மையைக் கண்டு கொண்டவர்க்கு விமோசனம் தூரத்திலிராது. இறை வனில் நம்பிக்கை இலக்காக வருகிறது. உலகிலே வாழ் விலிருந்து உன்னமை நிலைக்கு உயர்ந்துவிட மூடிகின்றது. இந்த உடம்பே எல்லாம் என்னும் கருத்தின் முக்கியத் துவம் குன்றி, அதுவிரைவில் தூரசோ, சாம்பரோ ஆகி விடும் என்ற உண்மை தெளிகிறது. இறுதி விடுதலைக்கு ''நான் யார்'' என்ற ஆராச்சியும் (ஆத்ம சிந்தனையும்) இறைவழிபாடும் (தெய்வப் பிராப்தியும்) முக்கியம் என்று சாயி வழிகாட்டுகிறார்.

சத்ய சாயிபாபாவின் உபதேசங்களை கேட்பதால் மக்கள் சரியான பாதையில் செலுத்தப்பட்டு மனம் பரி சுத்தப்படுவதோடு ஐயங்களும் நீங்குகிறது. மனித சமூ கத்தை உயர்த்துவதற்காக உடல் எடுத்த தெய்வமாகை யால், மக்கள் மனசில் எண்ணங்கள் ஒய்ந்து விடுகின்றன.

சுகரிஷி ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் இன்னொரு விசேஷத்தையும் குறிப்பிடுகிறார். இந்த அவதாரத்திற்கு (நோய் பிணிகளைக்) குணப்படுத்தும் தகைமையும் தனக்கு ஏற்படும் உபாதைகளை, மாற்றக்கூடிய தகுதியும் இருக்கும். இந்தச் சக்தி இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டு வேறெங்கும் காணமுடியாததாயிருக்கும். ஸ்ரீ சத்ய சாயி பாபா இந்த உலகத்து மக்களுக்கு மாத்திரமன்றி, மற்ற லோகங்களிலுள்ள மக்களுக்கும், தேவலோகத்தவருக்கும் இந்தக்குணப்படுத்தும் வல்லமையைப்பாவிப்பார். சில நேரங்களில் அவர் வேறு உலகங்களிலுள்ளவர்களுக்கு அவர்களுக்குக் கிடைத்த சாபத்தின் நிமித்தமாய்கிடைத்த பிணியைத் தான் ஏற்கிறபொழுது எவரும் புரிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும். இப்படிச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்குரிய அபாயம் நீங்கியதன்பின், தான் எடுத்துக் கொண்டநோயைத் தானே மாற்றிக்கொள்வார். அவருக்கு மனிதருடைய ஆயுளை நீடிக்கும் சக்தியும் உண்டு. அதன் காரணமாய்ச் சிலர் மறுபிறப்புப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அநேகர் அவர்களுடைய பாபமிகுதியினால் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் கடாட்சத்தைப் பெறமுடியாதவர்களாயிருக்கிறார்கள். கலியுகத்தினுடைய தன்மை மிகக் கடுமையான ஒரு நிலைக்கு வரும் நேரத்தில்தான் மக்கள் அவர்மேலான ஒரு சக்தி என்று அறிவர். அவர்கள் அவரை ஒரு பெரிய சக்கரவர்த்தியை வணங்குவதுபோல பணிந்து வணங்குவர். அப்பொழுது உலகத்தில் வாழும் அதி உயர்ந்த புருஷராக கணிக்கப்பெறுவர்,

அவரிடம் பெரும் பரிசுத்தப்படுத்தும் தகைமை உண்டு. அவரைக் கண்டாலே, அவரோடு ஒரு வார்த்தை பேசினாலே, எவரும் பரிசுத்தப்பட்டுவிடுவார், ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பரிசுத்தம் வேண்டியதே. ஏனெனில் நாம் இவ்வுலகில் வந்து பிறப்பதென்றால் முன்ஜென்மத்தில் செய்த ஏதோ தவறுக்காகவே இருக்கும். ஆனால் இத்தகைய தெய்வபுருஷரிடம் நாம் நம்மை அர்ப்பணிப்பதாலும் அவருடைய அனுக்கிரகத்தினாலும், இம்முன் ஜென்ம

கர்மாக்கள் கரைந்து குறைந்துவிடும். முற்றாய் நீங்கியும் விடும்.

சுகர் நாடி, சாயிநாதர் விஷ்ணு சொரூபம் என்றும் சாட்சாத் மாகாவிஷ்ணுவின் அவதாரமே என்றும் வலியுறுத்திக் கூறுகிறது. சாயிநாதரைக் காண்பது மாகாவிஷ்ணுவைக் காண்பதற்குச்சரி என்கிறார் ரிஷிசுகர். ஸ்ரீ சத்ய சாயிபாபாவினுடைய பரம்பரை என்று நாம் அறிந்ததை விட சுகர் நாடி மேலதிகமாகவும் ஒன்றைச் சொல்லுகிறது. அதன்படி கபிர்தாஸ் என்னும் வடநாட்டு மகானே ஷீர்டி சாயி பாபா வாகப் பிறந்து பின் சத்ய சாயி பாபாவாக வந்ததாகவும், அவர் இன்னொரு உருவில் மறுபடியும் வருவார் என்பதுமாகும், ஆனால் இது புதினமல்ல. அவர் இதுவரை 101 பிறப்பு எடுத்திருக்கிறார். எப்பொழுதும் லோக க்ஷேமத்திற்காகவே. சிர்டிசாயி பாபாவாக இருந்த பொழுது உலகத்தில் துன்பத்தை நீக்குவதற்குத்தான் பிறவி எடுக்கவேண்டும் என்று சங்கல்பித்தார். அதனால் இப்போது சத்ய சாயி பாபாவாகப் பிறந்திருக்கிறார். இந்த அவதாரத்தில் அவர் முழுமையான தெய்வீகமே. பூரணமான கடவுள் அவதாரமே, இந்தப் பிறப்பு முழுமையும் பரிசுத்தமானது. பூரண பிரம்ம ஞானமுள்ளது.

எவராவது அவரைப்பற்றி அறியாமலோ புரிந்து கொள்ளாமலோ அவரைக்குறை கூறுவாரானால் அவர் பாவம் செய்தவராவர். ஆனால் மிக அண்மையில் அநேகர் அவருடைய தெய்வ தத்துவத்தை ஏற்றுக்கொள்ளவருவார்கள். ஏனெனில் அவருடைய தெய்வசக்தியை அவர்கள் கண்டிருப்பார்கள். 1979 ஆம் ஆண்டின் கோடைகாலத்திற்குப் பிறகு காலத்தின் போக்குமாறும். தர்மம் மெல்லத் தலைதூக்கத் தொடங்கும். தெய்வீகத்தில் உள்ள அவநம்பிக்கை குறையத்தொடங்கும். இந்தியாவிற்கு நல்லகாலம் பிறக்கும். இந்த மகாபுருஷர், அதாவது இந்த மகாசக்தியின் வல்லமையும் செல்வாக்கும் மேலும் நிலைபெற்று நிற்கும். சத்ய சாயி பாபா இதுவரை செய்துவந்த அற்புதங்களிலும மேலான அற்புதங்களைச் செய்வார். சுகர் நாடியில் இப்பேற்பட்ட அற்புதங்களுக்கு, ஒரு உதாரணம். ஸ்ரீ சத்ய சாயி பாபா ஆகாச மார்க்கமாகச் சென்று

கொண்டிருக்கும் ஒரு ஆகாச விமானத்தை அதன் எரி பொருள் முடிந்த பின்னும் நெடுநேரத்திற்கு ஆகாசத்தில் ஓடிக்கொண்டிருக்கச் செய்வது என்கிறது.

ஸ்ரீ சத்ய சாயி பாபா எந்தவயதிலும் இளமையுள்ள வராகவே காட்சியளிப்பார். அவர் பெரிய உண்மைகளைப் போதிப்பார். அவருடைய சொற்களைக் கேட்க வந்திருப்பவர்களுடைய பலயீனங்களைக் கண்டு அவர் புன்முறுவலே செய்வார். மகாபுருஷராகிய அவரின் பெரும் புகழை நாம்காணக் கூடியதாயிருக்கும் என்று சுகர் நாடி மேலும் கூறுகிறது.

"இன்னும் அநேக விபரங்கள் ரிஷி சுகரின் அந்த ஓலைகளில் இருக்கின்றன. நான் முழுவதையும் ஒரு புஸ்தகமாகப் பிரசுரிக்க இருக்கிறேன். அதில் குறிப்பிட்டிருக்கிற பெயரிலேயே அதாவது 'சாயி சரித்திரா மிர்தக் கிரந்தம்'' என்றே வெளியிடுவேன்'' என்று அந்தப் பண்டித மேதையான ஆச்சாரியா சாஸ்திரி கூறினார்.

ரிஷி சுகரின் அற்புதமிக்க இந்த ஏட்டுச் சுவடிகளைக் கண்டுபிடிக்குமுன் நான் ஒரு சாயி அடியானாய் இருக்கவில்லை, ஆனால் இந்த ஏடுகளை நுணுகி ஆராய்ந்து படித்தறிந்தபின் எங்கள் மத்தியில் வசிப்பது கடவுளின் அவதாரமே என்று அறிந்துகொண்டேன். ஆதலால் ஸ்ரீ சத்ய சாயி பாபாவைப் பார்க்கப் போனேன். அவரைக் கண்ட உடனேயே நான் ஒரு மகா சத்தியின் அண்மையில் இருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன். இந்த சாயிகிரந்தத்தை மக்கள் படிக்கவைக்க அதை அச்சிடவேண்டும். ஸ்ரீ சத்ய சாயி பாபாவைப்பற்றிய அவருடைய பிறப்பு, வந்த நோக்கம் இவற்றை அறியாத மக்களுக்கு அது பெரும் மேன்மைதரும். காலத்தையும் இடத்தையும் கடப்பதற்கு ஒரு பாலமாகத்தான் இந்தச் சுகர் நாடி செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு சைதன்யக் கிரந்தம், அதாவது ஆத்ம சக்தி நூல் என்று ஸ்ரீ ஆச்சாரிய சாஸ்திரிகள் கூறி முடித்தார்.

(இக்கட்டுரை ஸ்ரீபதி சகுந்தலா பாலுவின் '' லிவிங்டிவினிற்றி '' என்னும் நூலைத் தழுவியது.)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் செய்மதி (Sattelite) அற்புதம்

“இது விஞ்ஞானமல்ல. இது பாபாவின் ஒரு அற்புதம்” என்றார் கலிபோர்ணியாவிலுள்ள லாஜொல்லாவைச் சேர்ந்த லீலா யங்கும் ஹோமர் யங்கும். திரு சத்ய சாயி பாபாவைக் காண இந்தியாவிற்கு 197-2ல் பக்தர்கள் குழுவுடன் லீலா சென்றிருந்தார். ஹோமர் அமெரிக்காவில் தங்கிவிட்டார். ஸ்ரீ சத்ய சாயி பாபாவைக் குழுக்களுடனும், நேர்முகமாகவும் சந்திக்கும் பாக்கியம் லீலாவுக்குக் கிட்டியிருந்தது.

வீடு திரும்பியதும் லீலாவுக்கு ஒரு அதிசயம் காத்திருப்பதாக அவரது கணவர் யங் கூறினார். லீலா இந்தியாவில் இருந்த சமயம் புட்ட பர்த்தியின் படமொன்றை எடுக்கும் படி ஈரோஸ் (EROS–Earth Resources Orbiting Sensor) என்னும் பூமியைச் சுற்றிவரும் அமெரிக்கச் செய்மதி ஸ்தாபனத்தைத் கேட்டதாகக் கூறினார். அட்சரேகை தீர்க்க ரேகைகள் Lattitude Longitude) கொடுத்தால் பூமியின் எந்தப்பாகத்தையும் தாங்கள் படம்பிடித்துத்தர முடியும் என்று கூறியிருந்தார்கள்.

புட்டபர்த்தியைக் காண்பிக்கும் இந்தியாவின் வரைபடம் ஒன்றும் ஹோமருக்கு அகப்படவில்லை. ஹோமர் இதற்காக நிறைய ஆராய்ச்சி செய்யவேண்டியிருந்தது. இறுதியில் ஈரோஸ் (EROS) இற்காக இடம் கண்டுபிடித்துக் கொடுத்து பூமிக்கு 200 மைல்களுக்கு மேலிருந்து புட்டபர்த்திப் பகுதியை அவர்கள் படம் எடுத்தார்கள்.

சத்ய சாயி பாபாவைப் பற்றிய அற்புதங்கள் பலவுடன் புதுமெருகு பெற்ற லீலா வீடு திரும்பினர். செய்மதியில் இருந்து எடுக்கப்பட்டதாய் பெருமையுடன் கூறியவாறே அந்தச் செய்மதிப் படங்களை ஹோமர் கையில் அசைத்துக் காட்டினர். ஆசிரமம், மந்திர், தங்கும் கட்டிடங்கள் எல்லாம் படத்தில் தெரியுமென்று லீலா ஆவலோடு படத்தை வாங்கிப்பார்த்தாள். வேறொன்றும் அவள் காணவில்லை. சந்திர மண்டலத்தரை போன்று கிடங்கும் குழிகளும் நிறைந்த வெற்று நிலப்பரப்பையே அவள் அதில் கண்டாள். "இந்தப் படங்கள் எடுக்க எவ்வளவு செலவு என்று கேட்டபொழுது '69 டொலர்' என்றார் அவர். "எங்கள் சுயதேவைக்கு ஒவ்வொரு பென்னியும் வேண்டியிருக்க, இந்த ஒன்றுக்கும் உதவாத படங்களுக்கு இவ்வளவு செலவு செய்து விட்டீர்களே. பாபா இந்தப் பள்ளங்களையும், குழிகளையும் என்ன செய்யப்போகிறார். அவர் கடவுளானால் பூமி எப்படி இருக்கும் என்று அவருக்குத் தெரியும், இல்லையேல் இப்படங்களில் பிரயோசனம் இல்லை" என்றாள். அமைதியாகப் படங்களை ஒன்று சேர்த்த ஹோமர் அவற்றைத்தன் அலுவலகத்தில் தள்ளிவிட்டார்.

வருடங்கள் உருண்டோடின. ரெக்கேட் பஜகலிபோர்னியாவில் ஒரு விவாகத்திற்குச் சென்றிருந்த சில நண்பர்கள் யங் தம்பதிகளின் இல்லத்தில் தரித்து நின்றனர்.

இந்த யங் குடும்பம் ஒரு சாயி நிலையத்தை நடத்துகிறார்கள். அத்துடன் ஞாயமான தொகை சாயியின் சிறந்த படங்களும் அங்கே வைத்திருக்கிறார்கள். ஆர்வமுள்ள அடியார்கள் போன்று, அங்குவந்த விருந்தினர் படங்களை நெடுநேரம் பார்த்து அவற்றின் அழகை வியந்து மெச்சிப் பேசிக்கொண்டனர்,

சடுதியாக "உங்களுக்கு அந்தச் செய்மதிப் படங்களையும் காட்டுகிறேன்" என்று ஹோமர் சொல்லிக் கொண்டு உள்ளே விரைந்தார். லீலா "ஏன் இதை வீணுகக் காட்டுகிறீர்கள்" என்று தடுக்கவும் அவர் கேட்கவில்லை விருந்தினர் மௌனமாக இவர்களை நோக்கினுர்கள். 'இவர்களுக்கு சந்திரனிலுள்ள கிடங்குகளையும், துவாரங்களையும் காட்டி என்ன புண்ணியம் என்று லீலா எண்ணியே புருஷனைத் தடுத்தாள்.

அந்த விருந்தினரில் ஒருவர் செய்மதிப் படத்தை இப்படியும் அப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டு இதோ இருக்கிருரே சாயிபாபா என்று கத்திவிட்டார். எல்லோரும் பார்த்தார்கள். ஸ்ரீ சத்ய சாயி பாபாவுடைய உருவம் (அந்தச் செய்மதிப் படத்தில் தெளிவாகத் தெரிந்தது. அவருடைய தலைமயிர், அவருடைய இடது பக்கக் கன்னத்திலுள்ள ஒரு காய் கூடத்தெரிந்தது. ஹோமர் நம்ப முடியாமல் எட்டிப்பார்த்தார். இந்த உருவம் இதுவரை எங்கே ஒளித்திருந்தது. மெய்யாக, இது முன்னம் இருக்கவேயில்லை. ஒருவேளை நான் எல்லாக் கோணங்களிலும் பார்க்கவில்லையோ? அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த நாலு படப் பிரதிகளிலும் அவரின் உருவம் எப்படித் தெளிவாக இருக்கிறது என்ருர்.

ஹோமர் இந்த நான்கு படங்களுள்ளும் தெளிவான பிரதியை நன்கு ஆராய்ந்தார். ஆற்றுப் பகுதியும் மரஞ் செடிகளும் சேர்ந்து ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உருவத்தை உண்டாக்கியதனுல் அப்படி ஒரு படம் எடுப்பதற்கு 20 மைல் அகலம் 40 மைல் நீளமான ஒரு பரப்பையல்லவா படமெடுத்திருக்க வேண்டும். அப்படியிருக்க முடியுமா என்று அதிசயித்தார்.

இது சாயியின் இன்னொரு அற்புதம் என்று எல்லோரும் மகிழ்ச்சிபொங்க ஏற்றுக்கொண்டார்கள். இதற்கு வேறு ஒரு விளக்கமும் சொல்ல முடியாது. அந்தநாள் தொடக்கம் லீலாவின் வீட்டிற்கு மகிமைதரும் படமாக அப்படங்கள் இருந்தன. அங்கு வந்த அடியார்களுக்கு கண்குளிரும் காட்சியாகவும் இருந்தது.

ஹோமர் செய்மதி நிலையத்தோடு தொடர்பு கொண்டு இது அவரின் அற்புதந்தானா என்று சோதனை செய்வதற்காக இன்னும் சில பிரதிகள் தரும்படிகேட்டார். ஆனால், அவர்கள் இந்தச் சொல்லப்பட்ட படம் இங்கே காணவில்லை. அது தொலைந்துவிட்டதாக முடிவு செய்துவிட்டோம் என்றனர். இது சத்திய சாயிவின் லீலை என்பது தெட்டத்தெளிவாயிற்று.

(ஹோமர் என்பவர் அமெரிக்க தொழில் நுட்பத்திற்கு கண்டுபிடிப்புகளைச் செய்து தன் ஆற்றல்களை உதவிய ஒரு விஞ்ஞானி).

(இந்தக் கட்டுரை ஸ்ரீமதி சகுந்தலா பாலுவின் லிவிங் டிவினிற்றி என்னும் நூலைத்தழுவியது. மேல் குறிப்பிட்ட செய்மதிப் படத்தை இந்நூலில் காணலாம்)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வான் அளாவிய தேஜஸ்

(டாக்டர் பாரஞேஸ்கி ஒரு விஞ்ஞானி. அவர் மனிதவுடலையும் மனதையும் உள்ளூர ஆராய்ச்சிக்கு உட்படுத்தியவர். அவர் தம்மை சுற்றியுள்ள காந்தமண்டலத்தின் விளைவாகத் தோன்றும் ஒளி வட் டத்தைப் புகைப்படம் எடுத்து ஆராய்ந்தால் நம் மனவெழுச்சியின் இறப்புக் குணங்களையும், மனப்போக்குகளையும் அறியவியலும் என்று புகல்கின்றார்; அவருடைய ஆராச்சிகளில் மனதின் செயல் விளைவு களும். மயக்குதலைச் செய்யும் மாய்மால மருத்துவமும் (Clinical-hypnosis) இடம் பெற்றுள்ளன; அவர் சென்ற 1979 ஜூலை மாதத்தில் ஒரு வாரத்திற்கு மேல் பெங்களூரில் தங்கியிருந்து ஜூலை 20-ஆம் தேதியன்று ஸ்ரீ சத்திய சாயி கல்லூரி மாணவர்களுக்கு உரையாடல் நிகழ்த்திய பின் அன்று மாலையிலேயே ஆந்திரப்பிரதேசத்திலிருந்து வந்தருளிய பகவானிடமும் அவர் ஆதரவில் பத்து நாட்களுக்கு உரையாடல்கள் நிகழ்த்திய 25-க்கும் மேற்பட்ட வல்லுநர்களிட மும் ஆன்மீக விஷயத்தைப் பற்றியும் சிறுவர்கள் பாடப் பயிற்சிக்கு வேண்டிய விஷயங்களைப்பற்றியும் கற்றறிந்த 670 குருமார்க ளிடமும் பேசினார்.

அவர் சொல்லியதாவது:

" இன்று மாலை இங்கு இருந்து உங்களிடம் குறிப்பிடத்தக்க மானிட நிகழ்ச்சி " என்பதைப் பற்றிப் பேசுவதற்கு எனக்களித்த சந்தர்ப்பத்தைப்பற்றி நான் மகிழ்ச்சியுறுகிறேன்; மனிதனைப்பற்றிய அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது வெகு முக்கியமான மனித குணம் நான்கே நான்கு எழுத்துக்கள் கொண்ட ' LOVE ' (அன்பு-பிரேமை) என்ற வார்த்தையில் அடங் கியதைப்பற்றி விளக்கம் மேலும் மேலும் கைவரப்பெறுகின்றது; மனிதவுடலைச் சுற்றிய ஆற்றல் அலைகளை புகைப்படம் எடுக்கவல்ல கிர்லியான் நிழற்படக் கருவியைப் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப் பீர்களென்றும் நான் நம்புகிறேன். அக் கருவியைக் கொண்டு பூக வுடலுக்கு வெளியில் அடிக்கடி நிலவிநிற்கும் மனித ஒளிவட்டத்தை (aura of man) ப்புகைப் படம் எடுக்கவியலும்.

ஒருவனின் மனவெழுச்சிகளாலும், ஆற்றல்களாலும், அன்புணர்ச்சியினாலும் ஒளி வட்டம் உடலிலிருந்து வெளியேறுகின்றது. 1969-ம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, காந்தமண்டல அலைப்பரவு புகைப்பட ஆராய்ச்சியின் மூலம் அலசிப் பார்க்கப்பட்டுள்ளன. அவ்வாராய்ச்சிகளின் விளைவாக ஒருவன் எப்பொழுதும் அன்பு வசப்பட்டிருக்கிறான், அன்பு செலுத்துகின்றான், அன்புமழை பொழிகின்றான் என்பது வெளிச்சமாகின்றது. மனிதர்களின் ஒளி வட்டங்கள் பளிச் சென்ற வர்ணங்களாலாகியவை, ஆற்றல் சக்தி வெண்ணிற வெளிச்சமுடையது. மனிதன் அன்புப் பெருக்குப் பெற்றிருந்தால் அவனுடைய ஒளிவட்டம் நீலநிறமுடையதாக விருக்கும். அவ்வன்பு மேலும் தீக்ஷண்யமானால் இளஞ்சிவப்பு நிறத்தை ஒளிவட்டம் பூணும். வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட மனிதனின் ஒளிவட்டம் நீலநிறத்திலிருந்து சிவப்பு நிறமாகமாறும். இந்த விதமான ஒளிப் பட்டைகளைப் பயிற்சியின் பலனாக மனிதனும் தன் ஊனக்கண்களாலேயே காணக்கூடும். சந்தர்ப்பமில்லாத காரணத்தினால் உங்களுக்கு நான் சொல்லும் விஷயங்களை அதிகாரபூர்வமாகப் புகைப்படங்களைக் கொண்டு நிரூபிக்க இயலாத நிலையிலிருக்கின்றேன். ஆனால் நான் சொல்வது உண்மை தானென்று நான் உங்களுக்கு உறுதி கூறுவேன்.

நாம் வெறுக்கும்பொழுதும், கோபம் கொள்ளும் பொழுதும் அமைதியான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒரு நிமிடநேரம் நாம் கோபத்திற்குள்ளாகும் பொழுது, இரண்டு நுண்ணிய மின் கலங்களால் (cells) இயங்கப்பெறும் பழிச்சென்று மின்னும் பல்பை மூன்று மாத காலம் எரியவைக்கக் கூடிய சக்தியை இழக்கின்றோம்! ஆதலால் விஞ்ஞான, மருத்துவ சான்றுகள் அன்பைப் போற்றி வளர்க்க நமக்கு எடுத்துரைக்கின்றன. அன்பென்பது நம்மால் வளர்க்கப்பட்டு பிறருக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய பொருள். குறைபாடில்லாத புகைப்படக் கருவிகளைக் கொண்டு எங்களால் ஐந்து மாதிரியான மாறுபட்ட ஒளிவட்டங்களை - அதாவது உடல் சார்ந்த, உள இயல் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த, ஆன்மீகத்தைச் சார்ந்த, அறிவைச் சார்ந்த ஒளி வட்டங்களை -- படமெடுக்கிறோம், அவைகள் அடிப்படையில் ஐந்தானாலும் ஒவ்வொரு ஒளி வட்டமும் அடிக்கடி மன வெழுச்சிகளினால் பாதிக்கப்பட்டு வர்ண மாற்றங்களைப் பெறும்.

நான் இந்தியாவில் நூற்றுக்குமேற்பட்ட சாதுக்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களில் அநேகப் பேர்கள் தங்களுடைய தனிப்பட்ட "தான்" என்ற உணர்ச்சியில் ஆழ்ந்தவர்களே. அவர்களுடைய ஒளி வட்டங்கள் அவர்கள் தங்களுக்காகவும், அல்லது தங்களுடைய நிறுவனங்களுக்காகவும் கொண்ட கவலையைய

காட்டுகின்றன. ஆதலால் அவர்களுடைய ஒளிவட்டங்கள் ஒரு அடி அல்லது இரண்டு அடி அகலமுள்ளதாகவே அமைந்துள்ளன நான் அமெரிக்காவிலிருந்து சாயிபாபா வென்ற இம் மனிதரை விஞ்ஞானி என்ற முறையில் பார்க்கவே வந்துள்ளேன்.

ஞாயிற்றுக்கிழமையன்று அந்த மாடி முகப்பின் பேரில் நின்று கீழே கூடியிருந்த பக்தர்களுக்கு அவர் தரிசனம் தருவதைக் கண்டேன்; ஆனால் சுவாமி வெளியிட்ட ஒளி வட்டம் சாதாரண மனிதனின் ஒளி வட்டமல்ல. வெளிப் போந்த வெண்ணிற ஒளி நான் அதிக அளவில் கண்ட மனிதனின் ஒளியைவிட இரண்டு மடங்குக்கும் மேற்பட்டதாய் நிறைந்திருந்தது. நீலநிறமோவென்றால் செயல் வகையில் வரம்பைமீறி எல்லையற்றதாக இருந்தது. அத்துடன் பொன்நிற, வெள்ளிநிற பட்டை வர்ணங்கள் அவைகளையும் தாண்டி, இக்கட்டித்திற்கு வெகு தூரத்திற்கப்பால் வானளவில் நின்றன. இம் மாதிரியான காணற்கரிய நிகழ்ச்சிக்கு விஞ்ஞான விளக்கம் இல்லவே இல்லை.

அவர் அமர்ந்திருக்கும் இந்நாற்காலியின் அருகாமையில் நின்று கொண்டிருக்கும் என்னை அவருடைய ஒளி வட்டம் வலிமை பெற்றிருக்கும் காரணத்தால் என்னைத் தாக்குகின்றது நான் அதன் விளைவை உணர இயலும். அப்பொழுதைக்கப்போது, நீங்கள் என்னைக் கவனித்திருப்பீர்கள், நான் என் முழங்கைகளை துடைத்துக்கொண்டே இருக்க வேண்டி இருந்தது. அதை நான் ஒப்புக்கொள்வது வெகு கடினம்; காரணம் நான் ஒரு விஞ்ஞானி. நான் 6000 த்திற்கும் மேற்பட்ட உரையாடல்கள் இவ்வுலகத்தில் பலவிடங்களில் நிகழ்த்தியுள்ளேன்; ஆனால் என்னை நம்புங்கள், முதல் தடவையாக இப்பொழுது என் முழங்கால்கள் நடுங்குகின்றன. சுவாமியினிடமிருந்து வெளியெழும்பும் ஒளி வட்டம் உங்களின் பேரில் அவர் கொண்டுள்ள பிரேமையைக் குறிக்கின்றது. நான் எத்தனையோ இருநிலையான பெரியோர்களைப் பார்த்ததுண்டு, ஆனால் அவர்களில் ஒருவராவது இவரைப்போல் வெகு எளிதில் கிடைக்கக் கூடியவராக இருந்ததில்லை. இது ஒன்றே இவருடைய மேன்மையைக் குறிக்கின்றது.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு ரால்ப் வால்டோ எமர்சன் என்ற மெய்விளக்கத் துறையாளர் ஒருவர் அமெரிக்காவிலிருந்தார். அவர் ஒரு முறை சொன்னதாவது. "வாழ்க்கையில் வெற்றியென்பது யாது?—அடிக்கடி வெகு அளவில் சிரிப்பது, குழந்தைகளின் விருப்பத்தைப் பெறுவது, பிறரிடம் உள்ள சிறந்த குணங்களையே காண்பது, நேர்மையற்ற நண்பர்களின் புறங்காட்டி செயப் பொறுத்திருப்பது, நாம் பிறக்கும்போது இருந்த நிலையிலிருந்து இவ்வுலகைச் சிறி

தளவு மேம்பட்டதாகச் செய்ய ஒரு சிறு நிலத்தோட்டத்தை, உண்டுபண்ணுவது, அல்லது சமூக நிலையைச் சிறதளவு உயர்த்துவது அல்லது ஒரு குழந்தையையாவது ஆரோக்கியமாக வளரச்செய்ய உதவுவது ஆகும். ஒரு உயிராவது, நீ பிறந்ததின்பின். சுகமாக, சுலபமாக மூச்சுவிட்டு உயிர்வாழ்கின்றது என்பதை அறிவதே நீ வாழ்ந்த வாழ்வின் வெற்றியைக் குறிக்கும்,'' என்பதே. வெற்றிக்குத் திறவு கோல் சுவாமி உங்களுக்குக் கொடுத்துள்ளார். அதுவே நான்கெழுத்து LOVE, பிரேமை. நான் மறுபடியும் சொல்வதானல் இரண்டு கால்களில் நடமாடும் LOVE, பிரேமை நம் சுவாமிதான். இப்பொழுதுதான் நான் அவ்வாறுன பிரேமை உருவத்தைக் கண்டேன் என்றே சொல்வேன்.

(பிறகு டாக்டர் பாரஞேஸ்கி தம் இருக்கையில் அமர்ந்தார். பகவானும் தெய்வீக உரையாடலைத் தந்தருளினர். டாக்டரும், ஏன் கூடியிருந்தயாவரும் பகவானை வியப்புடன் பார்த்து, ஆர்வத்துடன் அவர் திருவுரையாடலைக் கேட்டு மகிழ்ந்தனர். அதன் பிறகு டாக்டர் பகவானின் அனுமதியை நாடிப்பெற்று மேலும் பேசியதாவது.)

சுவாமி திருவுரையாடும் பொழுது கவனித்தேன். இளஞ்சிவப்பு நிறம்பெற்ற அவருடைய ஒளிவட்டம் என் நாற்காலிக்குப்பின் பெருமளவில் பரந்த நிலையில் சுவருக்குப் பின்னேயும் சென்றிருந்தது. உங்கள் எல்லோரையும் உள்ளடக்கிய வகையில் இந்தப் பெரிய கூடத்தையே நிறைத்திருந்தது. இந்தத் தனிச் சிறப்புக்குரிய காட்சிக்கு விஞ்ஞான விளக்கமில்லை, ஒரு வார காலமாக காலையிலும், மாலையிலும் உங்களிடையே சுவாமி நடந்து செல்லும் போது நான் கவனித்துள்ளேன். அவருடைய இளஞ்சிவப்பு நிற ஒளிவட்டம் அவர் பேசும் அல்லது தொடும் நபரினுள் சென்று பிறகு திரும்பி அவரிடமே வரக்கண்டேன். அவ்வாறு ஆவது ஏனெனில் நாம் யாவரும் அவரின் சக்தியைக் கிரகிக்கின்ருேம், அவருடைய சக்தி (ஆற்றல்) கரைகாணுதது. அது எங்கும் பரவி நிற்கின்றது. கூடியவர் ஒவ்வொருவராலும் அதிலிருந்து அந்தச்சக்தியைபெற இயலும், அவரைப் போல்கணக்கற்ற நபர்களின் மத்தியில் சுற்றிச் சுற்றி சென்று கொண்டேயிருந்தால் சாதாரண மனிதன் சக்தியற்ற, செயலற்ற நிலையை அடைவான். சக்கரம் பொருத்திய நாற்காலியிலிருந்த ஒரு சிறிய பெண் அருகில் அவர் சென்று கூச்சம் காட்டுவதைக் கண்டேன். அப்பொழுது அவரைச் சுற்றி எழுந்த பிரேமை ஒளிவட்டத்தைக் கண்டு ஆச்சரியத்தினுல் அசந்தே போய்விட்டேன்.

நான் கிறிஸ்தவனுகப் பிறந்திருந்தாலும், அதிலும் ரோமன் கத்தோலிக்காஞுறுலும் நான் எந்த ஒரு கோட்பாட்டையும் கொண்டவனல்ல, என் நாட்டிலுள்ள விஞ்ஞான சமூகம் கடவுள் உண்டென்ற கோட்பாட்டை ஒப்புக்கொள்ளக் கஷ்டப்படுகின்றது அவ்வாறு ஒப்புக் கொள்வது விஞ்ஞான ரீதியாகாதென்கின்றது. நான் இவ்வாறுன அறிக்கையை வெளியிடுவது என் நற்பெயருக்குக்கூட சிறிது களங்கம் விளைவிக்கலாம். இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் கூடத்திற்கு வெளியிலேயே அவர் கண்களை உற்று நோக்கினேன். அக்கண்களினுள் ஒரு ஒளி மிளிர்வதைக் கண்டேன்: அப்பொழுது தெய்வீ முகத்தைக் காண்கின்றேன் என்பது எனக்கு விளக்கமாகத் தோன்றியது. இதற்கு விஞ்ஞான விளக்கம் இருக்கவும் முடியாது. ஆனுல் அவர்கள் தெய்வீக ஒளி கொடுக்கின்றுர்கள்.

என் மதிப்பில் அவர் எதுவாகத் தோன்றுகிறுரோ அதுவே அவர், ஏதுவாக நீங்கள் இருக்கவேண்டுமென்றீர்களோ அதுவே அவர், அதுவே பிரேமை. அவரே பிரேமை சொரூபம்.

நான் அமெரிக்க நாட்டுத்தலைவர் ஃபோர்ட் இங்கிலாந்து ராணி இரண்டாவது எலிசபத், நெதர்லாண்ட் ராணி வில்லெயும்மிறு இவர்கள் இருந்த மேடைகளில் பேசியுள்ளேன். ஆனுல் இம்மாதிரியான அனுபவத்தைப் பெற்றதில்லை, இதை மறக்கவும் முடியாது இது உண்மையாகவே தன் தாக்குதலில் என்னை விஞ்சி மேற்கொண்டு விட்டது.

மூலம் : சனுதன சாரதி (தமிழ்)

---

அச்சுப்பதிவு:

ஸ்ரீ முருகன் அச்சகம்
282, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:

ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்
தாவடி.
23-11-85